DINAKARAN

12 SEP 2022

PAGE 14

புதுவை பல்கலைக்கழகத்தில்

# ஓய்வூதியம் பெறுவோர் இணைய முகப்பு திறப்பு

புதுச்சேரி, செப். 12: புதுவை பல்கலைக்கழகத்தின் ஓய்வூதியதாரர்களின் நலனுக்காக, துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், ஓய்வூதியம் பெறுவோர் இணைய முகப்பு திறந்து வைத்தார். ஓய்வூதியம் பெறுவோர் இணைய முகவரிகள், ஊழியர்களை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார். இந்நிகழ்ச்சியின் போது இயக்குனர் தரணிக்கராசு, சிறப்பு அதிகாரி ராஜீவ் ஜெயின், பதிவாளர் அமரேஷ் சமந்தராய, நிதி அதிகாரி லாசர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



புதுவை பல்கலைக்கழகத்தின் ஓய்வூதியதாரர்களின் நலனுக்காக, துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் ஓய்வூதியம் பெறுவோர் இணைய முகப்பு திறந்து வைத்தார்.

புதுவை பல்கலைக்கழகத்தின் அனைத்து ஓய்வூதிய ஆணைகளும் இணைய முகப்பு மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஒவ்வொரு ஓய்வூதியதாரரும் தங்கள் விவரங்களை இந்த இணைய முகப்பில் இருந்து பதிவிறக்கம் செய்து பயனடைவார்கள். ஒவ்வொரு ஓய்வூதியதாரரும் ஆயுள் சான்றிதழை பதிவிறக்கம் செய்து, இந்த சான்றிதழைப் பூர்த்தி செய்து பதிவேற்றினால், எங்கிருந்தும் அவர்கள் வாழ்க்கை சான்றிதழைச் சமர்ப்பிப்பதை எளிதாக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு ஓய்வூதியதாரரும் மாதாந்திர ஓய்வூதிய ரசீதை இணைய முகப்பில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

ஒவ்வொரு ஓய்வூதியதாரரும் வருமான வரி நோக்கத்திற்காக முழு ஆண்டு விவரங்களையும் கொண்ட ஓய்வூதிய பில் பதிவேட்டை பதிவிறக்கம் செய்யலாம்.

ஒவ்வொரு ஓய்வூதியதாரரும் தங்களின் படிவம்-16 மற்றும் 26ஏஎஸ் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.